# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 4 செவ்வாய்க்கிழமை (16-02-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:69


பொது சன நூலகம் 16 FEB 1999 மாநகர சபை யாழ்ப்பாணம்

# வவுனியாவில் இயக்க உறுப்பினர் ஆயுதங்களுடன் நடமாடத் தடை!

## மீறினால் கடும் நடவடிக்கை என்கிறார் ஜெனரல் பலகல்ல

வவுனியா, பெப்ரவரி 16

வவுனியாவில் தமிழ் இயக்கங்களுக்கு இடையேயான மோதல் தீவிரமடைந்து நிலைமை மோசமடைந்திருப்பதை அடுத்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

இயக்க உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது தடை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தடையை தமிழ் இயக்கங்களின் தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், நிலைமையின் தீவிரம் கருதி இந்த ஏற்பாடு கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

இந்தக் கட்டுப்பாட்டை மீறி எவராவது ஆயுதங்களுடன் நடமாடினால் அவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் —

பின்னர் விடுவிக்கப்பட மாட்டார்கள் என்றும் —

ஜெனரல் பலகல்ல சொன்னார். என்றாலும் இயக்கங்களின் மாவட்டத் தலைவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதைக் கவனத்தில் கொண்டு அவர்களின் நடமாட்டத்தின்போது மட்டும் பாதுகாப்புக்கு ஆயுதங்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் இயக்கங்கள் வவுனி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் குண்டு வெடிப்பு?

வவுனியா, பெப். 16

வவுனியா தாண்டிக் குளத்தை அண்டிய பிரதேசத்தில் நேற்று இரவு 7.30 மணியளவில் பெரும் வெடி ஓசை கேட்டதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

இந்த வெடிச் சத்தத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

இந்த வெடி ஓசையால் வவுனியா நகரப் பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டதாக அங்குள்ள எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ஹெலிகள் பறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-6-164]

## ஒட்டுமடத்தில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். ஒட்டுமடம் பகுதியில் நேற்று முன்தினம் படையினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த குணபாலசிங்கம் சுரேஷ் குமார் (வயது 21) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். இக்கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

## புலிகளின் சுவரொட்டி

யாழ்ப்பாணம் பெப். 16

விடுதலைப்புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட சில துண்டுப்பிரசுரங்கள் நேற்று யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் அறிவிப்புப் பலகைகளிலும் சுவர்களிலும் மற்றும் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

'எமது மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தும் எதிரியின் நடவடிக்கையை முறியடிக்க ஒன்றிணைவோம் என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை எனக் குறிப்பிடப்பட்ட துண்டுப்பிரசுரமும் வேறு சில பிரசுரங்களுமே பல்கலைக்கழகத்துக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி இவ்வாரம் மனு தாக்கல்

கொழும்பு, பெப். 16

வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு கோரி ஜே. வி. பி. கட்சி இவ்வாரம் தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளது என அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலில் ஊழல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் எனவே தேர்தலை ரத்துச் செய்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

★ வடமாகாணத்தில்

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரக நிதி உதவி இம்முறை குறைப்பு!

கொழும்பு, பெப். 16

யாழ். குடாநாட்டிலும் வன்னியிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குதான் வழங்கும் உதவியை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இம்முறை குறைத்துள்ளது.

கடந்த வருடம் 8 கோடியே 48 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை வடபகுதிக்கு என செலவிட்ட அந்த அமைப்பு—

இந்த வருடத்துக்கு ஏழு கோடியே 76 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாவையே ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

அதாவது இந்த ஆண்டில் 71இலட்சத்து 47ஆயிரம் ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

வடக்குக்கு இவ்வாண்டுக்கான ஒதுக்கீடு தொடர்பான ஒப்பந்தம் நேற்று கொழும்பில் கைச்சாத்தானது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பிரதிநிதி வை. கே, லிங்கும், வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் எம், கே, ஒபடகேயும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

வன்னிப்பகுதியில் நிவாரண நிலையங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் வசதிகளை ஏற்படுத்தவும்—

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரணம் தற்காலிக குடியிருப்பு வசதிகள் என்பவற்றைச் செய்து கொடுக்கவும்—

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்பவர்களுக்கு ஜீவனோ

(10 ஆம் பக்கம் பார்க்க)

நிவாரணத்துக்காக

## குமணவில் வந்த அரிசி பாவனைக்கு உதவாது!

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்டத்தில் நிவாரணம் பெறுபவர்களுக்கு விநியோகிப்பதற்காக 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட அரிசி மூடைகளில் சுமார் அரைவாசி மூடைகளில் உள்ள அரிசி பழுதடைந்த நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த வெள்ளியன்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த 'குமண' கப்பலில் ஆயிரத்து 657 மெற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வாசி கொழும்பில் கைது!

கொழும்பு, பெப். 16

கொழும்பு நகரின் முக்கிய இடங்களைக் கொண்ட வரைபடங்களை வைத்திருந்த ஒருவரை கொழும்புப் படை நடவடிக்கைத் தலைமையகப் படையினர் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதான சந்தேகநபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் —

ஆனால் அவரிடம் இருந்த அடையாள அட்டையில் மாத்தளை முகவரி இருந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன். இவரிடம் இருந்து சயனைட் வில்லை ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டு. மாவட்டத்தில்

## வாகனக் கடத்தல் குறித்து படைத்தரப்பு எச்சரிக்கை

மட்டக்களப்பு, பெப். 16

வாகனங்களின் பாதுகாப்பு விடயத்தில் மிகுந்த விழிப்புடனும், முன் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட திணைக்களத் தலைவர்களுக்கு மாவட்ட இணைப்பதிகாரி கேணல் ஏ. ஆர். ஸக்கி ஆலோசனை வழங்கி உள்ளார்.

மட்டக்களப்பு நகரில் அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் மா அதிபருக்கு எதிராக மனு

கொழும்பு, பெப். 16

பொலீஸ் மா அதிபருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றினை ஐக்கிய தேசியக் கட்சி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலின் போது ஐ. தே. கட்சியினதும் அதன் ஆதரவாளர்களதும் அடிப்படை உரிமைகளை மீறும் பல சம்பவங்கள் இடம் பெற்றதாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மற்றும் 5 பொலீஸ் உத்தியோகத்தர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புக் கரையோரம் படையினர் பெரும் தேடுதல்

மட்டக்களப்பு, பெப். 16

மட்டக்களப்பு வடக்கு கரையோரப் பிரதேசங்களில் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகரப் பகுதி உட்பட அதனை அண்டிய பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள், நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதை அடுத்து புலிகளுக்கு எதிரான இந்தத் தேடுதல் நடவடிக்கையைப் படையினர் ஆரம்பித்துள்ளதாக கிழக்கு பகுதிப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

[illegible] முதல் களுவன்கேணி வரையிலான கரையோரப் பகுதிகளில் கடந்த இரு தினங்களாக இத்தேடுதல் இடம் பெறுவதாகவும்—

இதன்போது விடுதலைப் புலிகளுடன் மோதல்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா இராசசிங்கம்

(இளைப்பாறிய அதிகாரி, சுங்கத் திணைக்களம்)

அராலியைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசசிங்கம் காலமானார்.

அன்னார் சின்னையா — நாகமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும் மனோன்மணியின் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் (சிங்கப்பூர்), செல்லம்மா, அமிர்தவல்லி ஆகியோரின் சகோதரரும் கொழும்பு ஏரம்பமூர்த்தி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-2 99) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சுழிபுரம் திருவடி நிலை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**கந்தையா வீமதேவர்**
(மருமகன்)

சுழிபுரம் மத்தி

(63167)

---

## ஸ்ரீமதி புஸ்பமலர் பஞ்சாட்சரம். B. Sc.

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை புகுந்த இடமாகவும் கொண்ட ஸ்ரீமதி புஸ்பமலர் பஞ்சாட்சரம் 15 - 02 - 99 அன்று அதிகாலை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் அமரர்கள் செல்லையா — சனகம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், ஆசிரியர் க. ந. பஞ்சாட்சரத்தின் பிரிய பத்தினியும், செ. சிவஞானம் (ஓய்வுபெற்ற அரச அதிபர்), அமரர்கள் செ. சிவசுப்பிரமணியம், செ. செல்வரத்தினம்(பொறியியலாளர்), மற்றும் திருமதி சிவமலர் வேலாயுதபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர்கள் ந. தேவராஜன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), ந. நவரத்தினம் (தொழில் நுட்பவியலாளர்), ந. இராமநாதன் (சேம நல அலுவலர், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), ந. வீரசிங்கம் (தபாலதிபர்) மற்றும் திருமதி சரஸ்வதி பஞ்சாட்சரம் ஆகியோரின் பெருமைக்குரிய மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (16 - 2 - 99) பகல் 1 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**தே. சுஜிதன்**
**வே. சிவதாசன்**
(பேறாமக்கள்)

அகிலேசர் வளவு,
நீர்வேலி வடக்கு.

(63155)

---

## கனகசபை திரவியம்

[வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர், முன்னாள் தலைவர், ப. நோ. கூ. சங்கம், சங்கானை]

குளத்தடி வீதி சங்கானையைச் சேர்ந்த கனகசபை திரவியம் 15-2-99 திங்கட்கிழமையன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முன்னாள் பட்டினசபைத் தலைவர் வைரமுத்து செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் நிமல்ராஜ் [வட்டு. இந்துக் கல்லூரி], நிமல்ராஜி [சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும் திருபதி செ. அன்னலட்சுமியின் அன்புச் சகோதரனும் செந்தமிழ்ச்செல்வம், திருமதி செ. மகேஸ்வரி, திருமதி ம. பூமணி, திரு வை. கிருஷ்ணதாசன், செல்வி மஞ்சுளா தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வரத்தினம், காலஞ்சென்ற மதிபூசணன் ஆகியோரின் அன்புச் சகலனும் திருமதி கி. வசந்தகுமாரியின் ஒன்றுவிட்ட அன்புச சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [16-2-99] செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி தி. திலகவதி**
[மனைவி]

குளத்தடி வீதி,
சங்கானை.

[63159]

---

## க. கணபதி

கரவெட்டி மேற்கு பாலிவெட்டை, விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த கணபதி காலமானார்.

அன்னார் கந்தசாமி [மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட-கிழக்கு மாகாணசபை, திருகோணமலை] அவர்களின் பாசமிகு தந்தையும் கலாநிதி பார்வதி கந்தசாமி [முன்னாள் விரிவுரையாளர், மொழியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்-கனடா] அவர்களின் அன்பு மாமனாரும் அபேதன் [பொறியியலாளர், மலேசியா], சுகந்தன் [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கபபடும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**சி. கந்தசாமி**

பாலிவெட்டை,
விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

[சி/6515]

---

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப் 16

இராணுவ தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கொல்லப்பட்ட குருநகர் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் என்பவரின் மரணம் தொடர்பான விசாரணையில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. வே. ஸ்ரீராஜேஸ்வரன் நேற்று இரண்டாவது நாளாக சாட்சியமளித்தார்.

யாழ். நீதிமன்றில் நேற்று பல மணி நேரம் நடைபெற்ற இந்த மரணம் தொடர்பான தொடர் விசாரணையை இம்மாதம் 19 ஆம் திகதிக்கு மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் ஒத்திவைத்தார்.

(ஐ-5)

## கைதான நால்வர் விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப் 16

படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் படை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேசராசா ஜெபசுதன் (ஆனைக்கோட்டை), திருநாவுக்கரசு சருணாகரன் (யாழ்ப்பாணம்), இராசதுரை கனிபாகரன் (அராலி) சுப்பிரமணியம் சுரேஷ்குமார் (கோண்டாவில்) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை —

கடந்த 8 ஆம் திகதி வெலிங்டன் சந்தியில் வைத்து கைது செய்யப்பட்ட கணேஷ் செல்வகுமார் (வயது 29 — ஓட்டுமடம்) என்பவர் மேல் விசாரணைக்காக காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-5)


**ராஜா**
யாழ்ப்பாணம்.
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
**காதல் கோட்டை**
இன்று காட்சிகள்
10-30, 2 30.
(சி/6410)



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
அஜித்குமார் - காஞ்சன்
நடித்த
உன்னைத்தேடி
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63093)



**நாகஸ்ஸ்**
பிரபு, சுகன்யா,
ராதாரவி, விசு
நடித்த
**சின்னமாபளே**
தினசரி: 10-30, 2-30
எமது அடுத்த வெளியீடு!
உள்ளத்தை
அள்ளித் தா
இந்தியாவில் 200 நாள்
[illegible]
வெற்றிச் சித்திரம்
(63168)


---

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமையாற்றும்
திரு. த. சண்முகநாதன் அவர்களின்
சகோதரர்

### தம்பையா குகதாசன்

(இளைப்பாறிய ஆசிரியர்)

15-02-1999 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**உத்தியோகத்தர்கள்**
**நில அளவைத் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**

(63164)

---

## கண்ணீர் அஞ்சலி

தனது அன்புத் தந்தையார்

### க. கணபதி

அவர்களை இழந்து வருந்தும் எமது வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**திரு க. கந்தசாமி**

அவர்களின் ஆழ்ந்த துயரத்தில் நாங்களும் பங்கு கொள்கின்றோம். அவருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

காலஞ்சென்றவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்விப் பணிப்பாளரும்,**
**ஏனைய அலுவலர்களும்,**
**ஊழியர்களும்.**

**யாழ்ப்பாணக் கல்வி வலயம்.**

(சி/6516)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பணியாளர்
**திரு. அ. சிவராசா**
அவர்களின் அன்புத் தந்தை

### அப்புக்குட்டி அப்பாத்துரை

அவர்கள் 14 — 02 — 99 அன்று விஸ்வமடுவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

**தலைவர், பொது முகாமையாளர்,**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**
**வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்**
**மருதங்கேணி, தாளையடி.**

(63166)

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை மனோகரன்

செட்டித்தெரு நல்லூரைச் சேர்ந்த சின்னத்துரை மனோகரன் (லங்கா சிமெந்து லிமிட்டெட், யாழ்ப்பாணம்) அவர்கள் 14-02-99 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
**ம. இந்திராணி**
[மனைவி]
**ச. யோகராஜா**
(ஆனந்தி - மைத்துனர்)
சிவானந்தா கபே, நல்லூரி

50/21, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/6514)

---

திருமதி

## சந்திரபிரபா லோகஞானம்

(உப அஞ்சல் அதிபர், யாழ். பல்கலைக்கழகம்)

திருமதி சந்திரபிரபா லோகஞானம் அவர்கள் 15-02-99 நேற்றுக் காலமானார்.

அன்னார் திரு. ஐ லோகஞானம் (அஞ்சல் அதிபர், வண்ணார்பண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் திருநெல்வேலி தெற்கு, காலஞ்சென்ற வைத்திலிங்கம் தெய்வநாயகி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை (விதானையார், பளை) இலட்சும்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் முரளிதரன் (லண்டன்) அவர்களின் அருமைச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**ஐ. லோகஞானம்**
(கணவர்)

அஞ்சல் அதிபர்,
வண்ணார்பண்ணை.

(சி/6513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேட்டோவில் போலந்து

வார்சோ, பெப். 16

''நேட்டோ'' கூட்டமைப்பின் உறுப்பு நாடாக போலந்து சேர்ந்துகொள்ளும். அநேசமாக மார்ச் 12 ஆம் திகதி இது இடம் பெறலாம் எனத் தெரியவருகிறது.

மார்ச் மாதம் 12 ஆம் திகதி அமெரிக்க ராஜாங்க அமைச்சர் மெடலின் ஆல்பிரைட்டிடம் போலந்து வெளியுறவு அமைச்சர் இது தொடர்பான ஆவணங்களைக் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்து நாடாளுமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி கூடும்போது நேட்டோவில் சேருவது குறித்த இறுதி அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1997 இன் மத்தியில் ஹங்கேரி, போலந்து செக் குடியரசு ஆகிய மூன்று நாடுகளும் நேட்டோவின் எதிர்கால அங்கத்துவ நாடுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. பலம் பொருந்திய மேற்கு நாட்டுப் படைகளுடன் இணைந்து இம் மூன்று நாடுகளும் பங்காற்றத் தயாராகியமை தெரிந்ததே. (இ-10)

# சனிக்கிழமைக்கு முன் தீர்வுகாண இரு தரப்புக்கும் நேட்டோ காலக்கெடு

## கொசோவோ பேச்சில் முட்டுக்கட்டை

பாரிஸ், பெப். 16

கொசோவோ பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு எதிர்வரும் சனிக்கிழமை வரை நேட்டோ அமைப்பு காலக்கெடு விதித்துள்ளது.

சனிக்கிழமைக்கு பின் தீர்வு காணப்படாவிட்டால் யூகோஸ்லாவியா மீது தாக்குதல் நடத்தப் போவதாக நேட்டோ எச்சரித்துள்ளது.

கொசோவோ சமாதானப் பேச்சுக்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பிரான்ஸில் நடைபெற்றுவருவது தெரிந்ததே.

யூகோஸ்லாவிய ரச தரப்பும் கொசோவோ விடுதலை இராணுவமும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு வருகின்றன.

பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டைஏற்பட்டு அது முறிவடையும்நிலையை அடைந்ததாலேயேகாலக்கெடு விதித்து நேட்டோ தற்போது நெருக்குதலை ஆரம்பித்துள்ளது.

அதே சமயம் சமாதானப் பேச்சில் தீவிரம் காட்டத் தவறினால் நேட்டோவின் தாக்குதலை எதிர்நோக்கத் தயாராகுமாறு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டுள்ள இரு தரப்பினருக்கும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தீவிரம் காட்டுமாறும்விரைவில்நல்லதொரு முடிவைக் காணுமாறும் கொசோவோ அல்பேனியர்களையும் சேர்பியர்களையும் இவர் வலியுறுத்துவார்.

இருதரப்பினரும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தி பேச்சுவார்த்தையைத் தோல்வியுறச் செய்தால் நேட்டோவின் விமானத்தாக்குதலுக்கு முகம் கொடுக்கத் தயாராகுமாறும் இவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இரு அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தவர்கள் கொசோவோ பேச்சுவார்த்தை வெற்றியடைய உதவுமாறு யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோசேவிக்கை வற்புறுத்தியுள்ளனர்.

தீர்வொன்றைக் காண்பதற்குரிய கால எல்லை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையிலும் பேச்சு வார்த்தையில் ஈடுபடும் இருதரப்புக்குமிடையில் இன்னும் ஆழமான பிளவுகள் நிலவி வருவதாகத் தெரிகிறது.

அந்த சமயம் கொசோவோவின் தென் பகுதியில் சேர்பியக் கடைகளைக் கொண்ட பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பின் காரணமாகச் சுமார் ஒன்பது பேர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (இ-10)

# சவூதி, குவைத், அமெ. தளங்களைத் தாக்கும் பலம் ஈராக்குக்கு உண்டு

## சதாம் ஹுசேய்ன் தெரிவிப்பு

பாக்தாத், பெப் 16

சவூதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும் சக்தி ஈராக்குக்கு உண்டு என ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்ன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஈராக்கின் வான் தடைப் பிரதேசத்தில் அமெரிக்கப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதல்களினால் மூன்று ஈராக்கியர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தினை அடுத்தே ஹுசேய்ன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈராக் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் நடத்திய தாக்குதல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குவைத்தும் சவூதி அரேபியாவும் பல எதிர் விளைவுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையை விரைவில் எதிர்நோக்கவேண்டிவரும் எனவும் சதாம் ஹுசேய்ன் தெரிவித்தார். (இ-க)

# லொக்கர்பீ குற்றவாளிகளைக் கையளிப்பதற்கு லிபியா இணக்கம்

லொக்கர்பீ குண்டு வெடிப்புத் தொடர்பான சந்தேக நபர்கள் இருவரும் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டால் அவர்கள் கைது செய்யப்பட்டு ஸ்கொட்லாந்தில் சிறை வைக்கப்படுவதற்கு லிபியா தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்புச் சந்தேக நபர்களை ஸ்கொட்லாந்து சிறைச்சாலைக்கு அனுப்புவது தொடர்பான பிரிட்டனின் யோசனைகளுக்கு லிபியா இது வரையில் எதிர்ப்புத் தெரிவித்தமை தெரிந்ததே.

ஆனால் ஐ. நா. கண்காணிப்புக் குழுவொன்று ஸ்கொட்லாந்து சிறையில் கண்காணிப்பில் ஈடுபடும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தொடர்ந்தே பிரிட்டனின் மேற்படி யோசனைக்கு லிபியா தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளது.

அதேவேளை தமது நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள்நீக்கப்பட்டாலேயே தாம் பிரிட்டனின் மேற்படி யோசனைகளுக்கு உடன்படுவதாகவும் லிபியா அறிவித்துள்ளது. (இ-10)

# 5 ஆவது தடவையாக அதிபரானார்

சிரிய நாட்டு அதிபராக மீண்டும் ஹபேஸ் அசாத், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஐந்தாவது தடவையாகவே இவர் மீண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சிரியாவின் வரலாற்றில் அதிபர் பதவிக்கு தொடர்ந்து ஐந்து முறைகளும் ஒருவரே தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

ஹபேஸ்அசாத் தொடர்ந்து அடுத்த 7 ஆண்டுகள் அதிபர் பதவியில் இருப்பார். (ஐ-க)

# மீண்டும் அனுமதி

வாஷிங்ரன் பெப். 16

''பயர்'' திரைப்படத்தை மீண்டும் திரையிடுவதற்கு இந்தியதணிக்கைச்சபை அனுமதி வழங்கியுள்ளது.

பெண்களுக்கிடையேயான தன்னினச்சேர்க்கையைப் பிரதிபலிக்கும் ''பயர்'' திரைப்படம் முன்னர் திரையிடப்பட்டபோது சிவசேனைக் கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்து பல ஆர்ப்பாட்டங்களைச் செய்திருந்தது.

இந்திய சமூக சம்பிரதாய பழக்க வழக்கங்களுக்கு மாறான விடயங்களை இத்திரைப்படம் சித்திரிப்பதாக இந்து தீவிரவாத கட்சியான சிவசேனை தெரிவித்திருந்தது.

ஆகவே திரைப்படம் மீண்டும் தணிக்கைச் சபையின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. திரைப்படத்தின் எந்தக்காட்சியும் வெட்டப்படாமல் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டதாக இந்திய ஒலி ஒளிபரப்புத்துறை அமைச்சர் பிரமோத் மஹஜன் தெரிவித்திருக்கின்றார்.

சிவசேனை எதிர்ப்பையடுத்து திரைப்படம் திரையரங்குகளில் இருந்து முன்னர் வாபஸ் பெறப்பட்டது தெரிந்ததே. [இ-10]

# செனட் தேர்தலில் ஹிலாரி போட்டி

வாஷிங்ரன் பெப். 16

2000 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அமெரிக்க செனட்டர்களுக்கான தேர்தலில் ஹிலாரி கிளின்ரன் போட்டியிடுவார் என்று நம்பப்படுவதாக வெள்ளை மாளிகையின் பிரதம அதிகாரி ஜோன் பெடெஸ்டா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு எதிரான குற்றப் பிரேரணை மீதான விசாரணை முடிவடைந்து விட்ட இவ்வேளையில் மனைவி பதிலளித்தார். செனட்டராக வருவதற்காகப் போட்டியிடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். மேலும் ஆதரவைப் பெறுவதற்காக அமெரிக்க மக்களுடன் கலந்து உரையாடி அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டுள்ளார் என்று பெடெஸ்டா தெரிவித்தார்.

இதேவேளை ஹிலாரி செனட்டருக்காகப் போட்டியிடுவாரானால் நிச்சயம் அவர் வெற்றி பெறுவார் அவர் வெற்றி பெற்றால் அமெரிக்க அரசுக்கு மிகச் சிறந்ததொரு செனட்டர் கிடைக்க வாய்ப்பு உண்டாகும் என்றும் அவர் கூறினார். (இ-10)

உலக அரங்கில்

## பயணிகள் எடுத்துச் செல்ல

# தடை செய்யப்பட்டுள்ள 20 பொருள்கள் விவரம்

யாழ்ப்பாணம், பெப் 16

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் மற்றும் கப்பல் மூலம் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் எடுத்துச் செல்லத்தடை செய்யப்பட்டுள்ள இருபது பொருள்களின் விவரங்களை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் விடுத்துள்ளது.

அவை வருமாறு:

★ ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள்.

★ வெடிப்பொருள்கள்.

★ விளையாட்டுத் துப்பாக்கி.

★ மின்சார வயர்கள்.

★ றிமோட் கொன்ரோலில் இயங்கும் உபகரணங்கள்.

★ மின்சாதன, எலக்ற்றோனிக் ''சிக்னல்'' உபகரணங்கள்.

★ மின்சார.எலக்ற்றோனிக் 'சிக்னல்' விளையாட்டுப் பொருள்கள்.

★ மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனையவற்றுக்கான ஹெல்மட், தலைக்கவசங்கள்.

★ தொலை நோக்கிக் கருவி.

★ திசை றிகருவி (கொம்பஸ்)

★ இராணுவ, கடற்படை, விமானப்படை, பொலீஸ் அணியும் சீருடை போன்ற சீருடை.

★ இரும்பும், இரும்புச் சட்டங்களும்.

★ முள்ளுக்கம்பி மற்றும் அவை வெட்டும் கருவிகள்.

★ நெருப்புப் பற்றக்கூடிய பொருள்கள், மண்எண்ணெய் தவிர்ந்த கற்பூரம், யூரியா உரம்.

★ சகல விதமான பற்றறிகள்.

★ மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்.

★ அச்சு இயந்திரங்களும், அதற்கான உபகரணங்களும்.

★ பெற்றோல், டீசல் மற்றும் ஓயில்

★ இரசாயனப் பொருள்கள். (இ-3)

# அறுவடையான நல்லின நெல்லை முழுமையாக விற்க வேண்டாம்

## கெயர் அதிகாரி விவசாயிகளுக்கு அறிவுரை

வலி தென்மேற்கு பெப். 16

புதிய நெல்லினங்களை அறிமுகப்படுத்தி தரமான அறுவடையைப் பெறுவது மட்டுமல்ல எமது நோக்கம், புதிய நெல் இனப் பயிர்ச் செய்கை அதிகரிக்கப்பட வேண்டும். புதிய நெல் இனங்களின் விதை நெல்லைப் பயன்படுத்துவதன் மூலமே இவற்றைச் சாதிக்கலாம். ஆகவே நீங்கள் அறுவடை செய்யும் நெல்லை உணவுத் தேவைக்கு முழுமையாக விற்காதீர்கள்.

இவ்வாறு 'கெயர்' ஸ்தாபன விவசாய உதவிப் பயிற்சியாளர் எஸ். ராஜலிங்கம் கூறினார்.

நவாலி வை. எம். சீ. ஏ. கட்டடத்தில் நவாலி விவசாயிகளுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியஎஸ். ராஜலிங்கம் மேலும் கூறியதாவது;

நவாலி விவசாயிகளுக்கு நாம் புதியரக விதை இனம் வழங்கியுள்ளோம். அவற்றின் அறுவடை காலம் நெருங்கியுள்ளது.

பொருத்தமான தொழில்நுட்ப முறையின் கீழ் அறுவடை செய்துநெல்லைப் பாதுகாக்க வேண்டும்.

நாம் இலவசமாக வழங்கிய விதை நெல் மூலம் பயன்பெற்ற அனைத்து விவசாயிகளும் மீள அதே அளவு நெல்லைத்தந்து உதவி செய்ய வேண்டும்.

மண்பரிசோதனைக்குரிய உபகரணங்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். புதிய நெல் மற்றும் வேறு இனங்களை அறிமுகப்படுத்துமாறு விவசாயத் திணைக்களத்தைச் கேட்டுள்ளோம் —என்றார்.

இந் நிகழ்வில் நவாலி வை. எம். சீ. ஏ. செயலாளர் ஏ. அன்புராசா, நவாலி விவசாயிகள் சம்மேளன முன்னாள் உப- தலைவர் வே சிற்றம்பலம், விவசாயி திருமதி எ. செல்வராசா, செ. குமரையா, பொ. கிருபானந்தன் ஆகியோரும் பங்குபற்றினர்.

நவாலி விவசாயிகள் சம்மேளன செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது. (இ-185)

# திருட்டு

வலி. வடக்கு, பெப். 16

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது. (இ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

செல்லர் கணேசமூர்த்தி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0901025077) கடந்த 13 - 02 - 99 அன்று கே. கே. எஸ். வீதிக்கும், மனோகராத் தியேட்டருக்கும் யாழ். புகையிரத நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 34, யாழ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (63135)

நா. விக்னேஸ்வரிஎன்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் (இல. 696102023V , 0901010136) 13 - 02 - 99 அன்று யாழ். பஸ் நிலைய முன்பாக தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், சுந்தரி மின் இலத்திரனியல் அழகுமாடம், 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில்ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (63134)

சென்ஹென்றீஸ் வீதி இளவாலையைச் சேர்ந்த காத்தி மகேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (592461196V), விசேட அடையாள அட்டை என்பன 10 - 02 - 99 அன்று ஆனைக்கோட்டை குறூஸ் மதவடிக்கும் கூழாவடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (63129)

சேியான் தேவாலயம் லவ்லேன் உடுவிலைச் சேர்ந்த திருமதி பற்றிக்ராணி ஆகிய எனது தே. அ. அ. (இல. 605663010V), விசேட அ.அ. (இல. 0907019169) என்பன கடந்த 13 - 02 - 99 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வீடு வரும்போது மருதனார் மடம் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி தேவாலயத்தில் தயவுசெய்து ஒப்படைத்து உதவுக. (63141)

## வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பெ. சு. குணரட்ணம் 148/7 (88), ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். (63140)

## விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள இரும்பு அலுமாரி ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் : T. செந்தூரன் 10, அம்மன் வீதி, கந்தர் மடம். (63132)

## யாழ்ப்பாணம்

சனிக்கிழமை வானொலியில் 'எங்கள் நாடு', 'பருவத்தே பயிர் செய்' நாடகங்கள் கேட்டீர்களா? அவற்றை எழுதியஅராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1 யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல், 2யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். (63139)

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 27 |
| 12 | 02 |
| 1926 | 1998 |

அமரர்

**விசுவலிங்கம் பூதப்பிள்ளை**

(இளைப்பாறிய தொலைத்தொடர்பு உத்தியோகத்தர், புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

ஆண்டு ஒன்று ஆயினும்
ஆறுமோ எம் உள்ளம்.

என்றும் உங்கள் நினைவுடன்
**மனைவி, மக்கள்.**

கோண்டாவில் கிழக்கு. (63144)

சுதுமலை வடக்கு

## ஈஞ்சடி ஞான வைரவர் தேவஸ்தானம்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | 0345 |
| 2 ஆம் பரிசு | 0232 |
| 3 ஆம் பரிசு | 1011 |

**10 ஆறுதல் பரிசில்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | 3019 | 6. | 0902 |
| 2. | 4320 | 7. | 3459 |
| 3. | 6025 | 8. | 4626 |
| 4. | 6103 | 9. | 0900 |
| 5. | 5864 | 10. | 3030 |

மேற்கூறப்பட்ட இலக்கங்களை உடையோர் தகுந்த ஆதாரம் காட்டி ஆலய பொருளாளரிடம் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தர்மகர்த்தா சபை

(63152)


ALL PURPOSE MULTI DIRECTIONAL

**KOBE-52**

TV/RADIO ANTENNA



பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி6492)


ஆத்தியடியில்

## வீடு விற்பனைக்கு

புலோலி மேற்கு, ஆத்தியடியில் நல்ல தண்ணீர்க் கிணற்று வசதியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:

செ. இரத்தினசோதி
''விக்கினேஸ்வரி இல்லம்'',
ஆத்தியடி, பருத்தித்துறை.

(63150)

# கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்துவ சங்கமான,
சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின்
இயக்குநர்சபை உறுப்பினரும், முன்னாள் தலைவரும் சிறந்த கூட்டுறவாளருமான

அமரர்

**கனகசபை திரவியம்**

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும், சங்கானை ப.நோ.கூ. சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
**யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.**

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/6507)


**ஸ்வராஜ்**

கிர்லொச்கார்
டிராக்டர்

SWARAJ

சேற்றிலும்
தரையிலும்
ஸ்வராஜ்



புதிய டிராக்டர்கள் இலகு கொடுப்பனவு முறையில் விற்பனைக்குண்டு

ESTD 1841

தொடர்ப ஆனந்த சமரசிங்ஹ இந்திரநாத் றொடறிகோ தொலைபேசி 691186
வரையறுக்கப்பட்ட மெக்வூட்ஸ்
10. ஞானாத்த பிரதீப மாவத்தை கொழும்பு -08
தொலைபேசி 697965-9 பெக்ஸ் 699454 ரெலெக்ஸ் 21153
காட்சியறை:
377, T.B. ஜெயா மாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி: 075 340287

(சி-6473)


# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**சுப்பையா செல்வநாயகம்**

(ஓய்வு பெற்ற சிறாப்பர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 12 - 1916 | 27 - 02 - 1998 |

திதி: 16 - 02 - 1999

நீங்கள் எங்களை விட்டு மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

**பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'கௌரி மகால்'
மானிப்பாய் கிழக்கு. (63148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணை அனுமதிக்கப்பட்ட 22 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் இல்லை

## சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

குடாநாட்டில் கைதாகி அனுராதபுரம் நீதிமன்றத்தால் பிணையில் அனுமதிக்கப்பட்ட 22 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படமாட்டாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும் வடக்கு இளைஞர், யுவதிகள் பிணையில் விடுக்கப்பட்டு மீண்டும் குறிப்பிட்ட திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்படுவது வழக்கம்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் 22 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யாது அவர்களுக்கு விடுதலை உத்தரவை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கியுள்ளது.

குறிப்பிட்ட 22 பேரும் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராகி தமது விடுதலை உத்தரவைப்பெற வேண்டும் என்றும் —

குறிப்பிட்ட 22 பேரும்கூட்டாக திருமலை வந்தால் விடுதலைஉத்தரவைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும்— மனித கௌரவத்துக்கான அமைப்பு அறிவித்துள்ளது.

விடுதலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள 22 பேரின் விவரங்கள் வருமாறு:

★ வல்லி தேவராஜ் — கொடிகாமம்.

★ தங்கமயில் கிருபாகரன் — மிருசுவில்.

★ கே. சுப்பிரமணியம்

★ பெருமாள் ஜெயராசா — பொன்னாலை, சுழிபுரம்

★ மார்க்கண்டு ராகேந்திரன் — மிருசுவில்.

★ குணபாலசிங்கம் சிவகுமார் — தவசிக்குளம், கொடிகாமம்.

★ குலசேகரம்பிள்ளை சிவராசா — மாசேரி, வரணி.

★ வன்னியசிங்கம் கார்த்திகேசு — அம்பன், குடத்தனை.

★ தங்கவேலாயுதம் ராஜகுலன் — நாவலடி, அல்வாய் கிழக்கு.

★ வல்லிபுரம் உதயகரன் — கைதடி வடக்கு.

★ நாகமுத்து யேசுதாசன் — கைதடி வடக்கு.

★ விஜயராஜா ஜெயச்சந்திரா — அல்வாய் மேற்கு.

★ பஞ்சலிங்கம் உத்தமபுத்திரன்.

★ ஜெயச்சந்திரன் அம்பிகை வதனதா.

★ ரத்தினம் சுரேந்திரன் — மீசாலை.

★ தாசன் மனோகரன் — மிருசுவில்.

★ கனகரத்தினம் கனகரூபன் — சாவகச்சேரி வடக்கு.

★ கந்தையா சச்சிதானந்தசிவம்.

★ கனகரத்தினம் ரத்னசிவானந்தன் — வியாபாரிமூலை.

★ ரட்ணகுமார் சுரேந்திரன் — வைரவர் கோயில், மல்லாகம்.

★ செல்லக்கண்டு ஜமீலதாஸ் — கொடிகாமம்.

★ நிக்கலஸ்பிள்ளை ஜெயநேசன் — எழுதுமட்டுவாழ்.

(இ-3)

# எழுதுநர் பதவிகளுக்கு 1300 வெற்றிடங்கள்

திருகோணமலை, பெப். 16

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களில் எழுதுநர் சேவையுடன் இணைந்த சேவைக்கு சுமார் ஆயிரத்து 300 வெற்றிடங்கள் உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எழுதுநர்மற்றும் இணைந்த சேவைக்கு என்று மாகாண மட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் இருந்து இந்த வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவிருக்கின்றன.

எழுதுநர், கணக்குப்பதிவு நர் பதவிகளுக்கான புள்ளி விவரங்கள் மாகாணசபைக்கு வந்து சேர்ந்து விட்டன என்றும்—

கூடுதல் புள்ளி பெற்றவர்களில் இருந்து ஆள்களைத் தெரிவு செய்யும் பணி உள்துறை அமைச்சில் இடம் பெறுகின்றது என்றும்—

விரைவில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இடம் பெறும் என்றும் — மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தட்டெழுத்தாளர், களஞ்சியப் பொறுப்பாளர், காசாளர் ஆகிய பதவிகளுக்கான புள்ளி விவரங்கள் இன்னும் இரு வாரங்களில் மாகாணசபைக்குக்கிடைக்கும் என்றும்—

அதன் பின்னர் அவற்றுக்கான நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

மாகாணத் திணைக்களங்களில் நிலவும் வெற்றிட விவரம் வருமாறு:—

எழுதுநர் — ஆயிரம், தட்டெழுத்தாளர் — 110, கணக்குப் பதியுநர் — 75, களஞ்சியப் பொறுப்பாளர் — 51, காசாளர் — 20.

(இ-3)

# கல்வி வலயத்துக்கு கணனிகள்

பருத்தித்துறை, பெப். 16

வடமராட்சி கல்வி வலயப் பணிமனைக்கு ஐந்து கணனிகளை கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது.

வலயக் கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் சகல நடவடிக்கைகளையும் கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டே இவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கென பணிமனையின் ஒருபகுதி நவீன வசதிகளுடன் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்தார்.

(இ-118)

# வேலணை பிரதேச செயலகம்

நெடுந்தீவு, பெப். 16

வேலணை பிரதேச செயலகம் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படும்.

வேலணை பிரதேச செயலர் எஸ். இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள திறப்புவிழா வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் கலந்து கொண்டு செயலகக் கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

வன்செயலால் சேதமுற்ற மேற்படி கட்டடம் ரூபா 50 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-121)

# பாலர் பாடசாலை

நல்லூர், பெப். 16

நல்லூர் வடக்கு சனசமூக நிலையம் பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க உள்ளது.

இதற்குத் தேவையான தளபாடங்களைத் தந்துதவ நல்லூர் பிரதேச சபை இணங்கியுள்ளதாக மேற்படி சனசமூக நிலையத் தலைவர் செ. குகதாசன் தெரிவித்தார்.

(இ-103)

# பல்கலை அனுமதிபெற்ற மாணவருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், பெப். 16

மல்லாகம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் இருந்து இந்த வருடம் பல்கலைக் கழக அனுமதி பெற்ற 10 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பின்தங்கிய பிரதேசமான மல்லாகம் தெற்குப் பகுதியில் இருந்து தெரிவான இந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அந்தப் பிரதேச கிராம சேவையாளர் இ. மு. அருமைநாயகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கலந்துகொண்ட வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி திலகநாயகம் போல் அந்த மாணவர்களுக்கு அன்பளிப்புக்களைவழங்கி பாராட்டுரை நிகழ்த்தினார்.

(இ-3)

# குடும்பப் பெண் தாக்குதல் இரு பெண்கள் பிணையில்

யாழ்ப்பாணம், பெப். 16

குடும்பப் பெண் ஒருவரை இரும்புக் கம்பியால் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இரு பெண்களைத் தலா 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் தலா 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் செல்ல மேலதிக நீதிவான் அனுமதித்தார்.

குருநகர்ப் பகுதியைசேர்ந்த நிர்மலநாதன் ரஞ்சினி என்பவரைத் தாக்கியதாக பிரஸ்தாப இரு பெண்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் இம் மாதம் 22 ஆம் திகதி அடுத்த தவணைக்குச் சமுகமளிக்குமாறு உத்தரவிட்டார்.

[இ-5]

# வவுனியா - கொழும்பு 'இன்ரர் சிற்றி' ரயில்

## அரச அதிபர் கோரிக்கை

வவுனியா, பெப். 16

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு தினமும் சென்று வரக் கூடிய வகையில் 'இன்ரர்சிற்றி' ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் போக்குவரத்து அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவிலிருந்து காலை 6-00 மணிக்கு புறப்படத்தக்க வகையில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டால் இந்த ரயிலில் வவுனியாவிலிருந்து கொழும்பு செல்லும் ஒருவர் தமது தேவைகளை நிறைவேற்றி விட்டு அன்று மாலையே வவுனியா திரும்பக் கூடியதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

'இன்ர சிற்றி' சேவை ஆரம்பிக்கப்பட்டால் பயணத்தில் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதுடன் கொழும்பில் ஏற்படும் பாதுகாப்பு கெடுபிடிகளிலிருந்தும் வவுனியா வாசிகள் தப்பிக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

## துறைசார்ந்த

# போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர் நியமனங்கள்

திருகோணமலை, பெப் 16

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் துறைசார்ந்த போட்டிப்பரீட்சைகளின் மூலமே இனி நிரப்பப்பட உள்ளன.

வடக்கு- கிழக்கில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை துறைசார்ந்ததாக நிரப்புவதற்காகபுள்ளி விவரங்கள்சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும்—

ஒவ்வொரு துறையிலும் எத்தனை ஆசிரியர்கள் தேவை என்ற விவரம்கிடைத்ததும் மாகாண பரீட்சைத் திணைக்களம், போட்டிப் பரீட்சையை நடத்தும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம், கலை, கவின் கலை என ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக போட்டிப் பரீட்சை நடத்தி திறமையானவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

(இ-3)

# கற்பித்தல் உபகரணம் லங்காமுடித்த மூலம்

புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் முதலாம், ஆறாம், ஒன்பதாம் தரங்களில் கல்விப் போதனையை மேற் கொள்ளத் தேவையான ஆசிரியர்களுக்கான கைந்நூல்கள், முதலாம் தர மாணவர்களுக்கு செயல்முறை கற்பித்தல் உபகரணங்கள் ஆகியன 'லங்கா முடித்த' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் வடிக்கப்பட்ட இந்த நூல்களையும் உபகரணங்களையும் கொழும்புக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் எடுத்து வருவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் திருகோணமலையில் இருந்து இந்தப் பொருள்கள் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாண வலயத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ள இந்தப் பொருள்கள் சகல வலயங்களுக்கும் பங்கிட்டு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் அமைந்துள்ள இந்த உபகரணங்கள் மூலம் போதனை மேற்கொள்ளும் முறை குறித்து ஆசிரியர்களுக்கு ஆறுநாள் பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது என்றும்—

இந்தக் கல்வித்திட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்த ஆசிரியர்கள் தங்கள் பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும்— அவர் கேட்டுள்ளார்.

(இ-3)

# பரீட்சைத் திணைக்களம் புதிய கட்டடத்தில்

திருகோணமலை, பெப். 16

அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வடக்கு—கிழக்கு மாகாண பரீட்சைத் திணைக்களம் புதிய கட்டடம் ஒன்றில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திணைக்களம் செயற்படும் புதிய கட்டடம் கடந்த வாரம் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் க. பரமேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட இந்தத் திணைக்களம் பல பொதுப் பரீட்சைகளை நடத்த ஏற்பாடுகளை [illegible]

(இ-3)


# தேவை

இரும்புக் கதிரைகள், பந்தல்கள்,
கண்ணாடி அலுமாரிகள் (அழகுசாதன கடைக்குரியது)
என்பன வாங்கப்படும். (2-00 p. m. — 6-00 p. m.)

எம்மிடம்
பட்டுப் புடைவைகள், சாயக் கொண்டைகள்,
பந்தல், மணவறை, ஒலி, ஒளி அமைப்புச்சாதனங்கள்,
சமையல் பாத்திரங்கள், பூமாலைகள், நாகபடம்,
நகைகள், சலங்கை. ஆரார்த்திப் பொருள்கள்
போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில்
ஓடருக்குப் பெறலாம்.

திருமுருகன் (செட்டியார்)
நீர்வேலி கந்தசாமி கோயிலடி. (63128)


# கண்ணீர் அஞ்சலி

பிரதிபலன் கருதாது எமது கல்லூரிக்காக அயராது சேவையாற்றிய எமது முன்னாள் ஆசிரியை

திருமதி
## கீதாஞ்சலி குகநேசன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

(63138)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் பற்றாக்குறை

## நோயாளர் பலர் அ'புரத்திற்கு

வவுனியா, பெப். 16

வவுனியா ஆஸ்பத்திரியில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையாக இருப்பதினால் இங்கே சிகிச்சைக்கு வரும் நோயாளர்களை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டியுள்ளது என்று மாகாண சுகாதாரப் பிரதிப்பணிப்பாளர் (வவுனியா) டாக்டர் எஸ். இளங்கோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:—

காது, தொண்டை, மூக்கு போன்றவற்றுக்கானசிகிச்சை மற்றும்சத்திர சிகிச்சைகளுக்கு வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படாமையினால் இது தொடர்பான நோயாளர்களை அனுராதபுரத்துக்கு அனுப்பிச் சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்தும் பெருமளவு நோயாளர்கள் நிபுணத்துவ சிகிச்சைக்காக வருகிறார்கள்.

வெளி நோயாளர் பிரிவில் தினமும் ஆயிரம் நோயாளர் வரையிலும் வார்ட்டுகளில் தங்கிதினமும் 300 நோயாளர் வரையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் 12ஆயிரம் அகதிகள் வசிக்கிறார்கள். இவர்களுக்கான மருத்துவச் சிகிச்சைக்கென நடமாடும் வைத்திய சேவை ஒன்றை நடத்தி வருகிறோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-5))


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
ம. செந்தூரன் அவர்களின் தந்தையாரான
**சி. மனோகரன்**

அவர்கள் அகால மரணமானதை இட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லையூர் நண்பர்கள்.

(63127)



## 3 ஆம் ஆண்டு நினைவு



மண்ணில் 1920 — 04 — 09

விண்ணில் 1996 — 02 — 16

அமரர்
**சின்னத்தம்பி செல்லப்பா**
[ மின்சார சபை உத்தியோகத்தர் ]

எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

S தங்கராஜா ( மகன் )
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

[63121]


# வல்லைவெளி வீதி அகலமாக்கப்படும்

பருத்தித்துறை, பெப். 16

பருத்தித்துறையையும் — யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் வல்லை வெளிப் பிரதான வீதியை அகலமாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியின் இருமடங்கிலும் உள்ள பற்றைகள் அகற்றப்பட்டு ஊரிமண் இடப்பட்டு வீதி அகலமாக்கப்பட்டு வருகிறது.

(இ-118)

# கப்பலுக்கு பதிந்து விட்டு 3,000 பேர் வவுனியாவில்

வவுனியா, பெப். 16

யாழ்ப்பாணம் செல்வதற்காக கப்பலுக்கு பதிவுசெய்து விட்டு 3 ஆயிரம் பேர் வவுனியாவில் தங்கி உள்ளனர்.

இவர்களில் 52 பல்கலைக்கழக மாணவர்களையும் 248 பொதுமக்களையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை வவுனியா அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

தம்மை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரி இவர்கள் அண்மையில் உண்ணாவிரதம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் ஒன்று சேர்ந்து புலம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் என்னும் அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

(இ-5)

# நியமனக்கடிதம்

வலி. வடக்கு, பெப். 16

யாழ். மாவட்டத்தில் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் iii க்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் சிலர் கொழும்பில் இடம்பெற்ற வதிவிடப் பயிற்சிக்கு போக்குவரத்து இன்மையால் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-86)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

பகுதி D

**கருத்தரங்குத் தொடர்-5**

இடம்: புவியியற்றுறை மண்டபம்,
யாழ். பல்கலைக்கழகம்.
காலம்: 17 - 02 - 1999 பிற்பகல் 3. 00 மணி.
தலைவர்: பேராசிரியர் கா. குகபாலன்
விடயம்: ''சுதந்திரத்தின் பின்னரான வெளிநாட்டு வர்த்தகப் போக்கும் இந்திய இலங்கை வர்த்தக ஒப்பந்தமும்''
வழங்குபவர்: திரு. பி. சிவநாதன்
தலைவர், பொருளியல்துறை.

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியர் நா. ஞானகுமாரன்
செயலாளர் பகுதி D

(62964)



## நெஞ்சில் நீங்காத நினைவலைகள்

### விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி





அமரர்
**அந்தோனிப்பிள்ளை தேவதாஸ்**
அன்னை மடியில் 14-12-1945
ஆண்டவன் அடியில் 05-02-1998

அமரர்
**பர்னாந்து அந்தோனிப்பிள்ளை**
அன்னை மடியில் 12-01-1922
ஆண்டவன் அடியில் 16-02-1998

அப்பாவாய் அப்பப்பாவாய்
அன்புக்கோர் அருங்கலமாய்
எம்மோடு உறவாடி
எல்லாம் தந்து இதயத்தில் குடியிருந்தீர்கள்
கண்ணீரில் எமைக் கரையவிட்டு
கர்த்தர்பதம் சரணடைந்தீர்கள்
ஓராண்டு மறைந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவு
உருகி உளம் பொங்கி நிதம்
உங்களுக்காய் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள், உறவினர்கள்.

10, மத்தியூஸ் வீதி. யாழ்ப்பாணம்.

(63089)



## நீங்காத நினைவில் ஈராண்டுகள்



திருமதி
**சிவராசா யோகராணி**

மலர்வு மட்டுவில் 30 — 04 — 1960

உதிர்வு கனடா 10—03—1997

ஆனதோ ஆண்டிரண்டு
அகல்விளக்காய், ஆனந்தஜோதியாய்
றோஜா மலராய் எங்கள் உள்ளங்களிலும்
இல்லங்களிலும் நிறைந்து நிற்கின்றன உம்நினைவு.
நூறாண்டு சென்றாலும் பாசம் நிறைந்த
உங்கள் அன்பை மறவோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

மட்டுவில் மத்தி,
சோமஸ்கந்த ச. ச. நிலையம் அருகில்,
சாவகச்சேரி.

(63090)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயனுள்ள முயற்சி

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு வற்புறுத்தி இம் மாதம் இருபத்தாறாம் திகதி கொழும்பில் மாபெரும் பேரணியும் பொதுக் கூட்டமும் நடைபெற உள்ளன.

சமாதானத்துக்கான தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தபேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கும் நூறுக்கும் மேற்பட்ட அமைப்புகள் பேரணியிலும் கூட்டத்திலும் கலந்து கொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வமதக் குழு ஒன்று வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் —

இனப்பிரச்சினைக்கு, சமாதான வழியில் பேச்சுவார்த்தை மூலம், தீர்வு ஒன்றைக் காண்பதில் புலிகள் உண்மையாகவே அக்கறை கொண்டுள்ளனர் என்ற நம்பிக்கை தெற்கில் பரவியுள்ளது.

அதே போன்று அரசியல் தீர்வு காணும் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு அரசு பின்னடித்து வருகிறது என்பதனையும், தெற்கில் நியாய மனப்பான்மை உள்ளவர்களும் சமாதான விரும்பிகளும் தெரிந்து கொண்டுள்ளனர்.

அதன் விளைவே உத்தேச பேரணியும் பொதுக் கூட்டமும் என்று கொள்ளலாம். பௌத்த மகா சங்கத்தின் உயர் பிரதிநிதிகளும் முதன் முறையாக போர் நடைபெறும் வன்னிக்குச் சென்று உண்மைநிலையை அறிந்துள்ளனர். சமாதானப் பேச்சுக்கு அவர்களின் ஆதரவும் உண்டு என்ற விளக்கம் என்றுமில்லாதவாறு புதிய பரிமாணம் ஒன்றை அருமையான சந்தர்ப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்காது, நழுவ விடாமல் ''சூட்டோடு சூடாக'' தக்கவாறு பயன்படுத்த அரசு முன் வந்திருக்க வேண்டும். ஆனால் அரசு பேச்சு வார்த்தை குறித்தோ, சர்வமதக் குழுவின் விஜயத்தின் பின்னான சாதகமான நிலையை நயந்தோ இப்பத்தி எழுதப்படும் வரை வாயும் திறக்கவில்லை!

வெவ்வேறு சில்லறை விடயங்களில் அரசு தனது புலனைச் செலுத்திக் கொண்டிருக்கிறதே அன்றி நாட்டின் பிரதான தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அக்கறை காட்டுவதாக இல்லை.

ஆகையால் தென்னிலங்கை மக்களினதும், மத குருமார்களினதும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் விதத்தில் பேரணியும், கூட்டமும் நடைபெற இருப்பது வரவேற்கத் தக்கதாகும். இது பயனுள்ள முயற்சியுமாகும்.

போரை உடனே நிறுத்தி இரு தரப்புகளிலும் எதிர்காலச் சந்ததியினர் இறந்து போவதை நிறுத்துமாறும் உத்தேசபேரணி—பொதுக் கூட்டம் மூலம் அரசை உந்த வேண்டும்.

இது நல்ல தருணம்; நழுவிப் போகாது பார்த்துக் கொள்ளப் பேரணி — கூட்டம் வெற்றிகரமாக நடைபெறட்டும்.

# பட்டலந்த கொலை வழக்குத் தீர்ப்பு

# மனிதஉரிமைமீறலைக்குறைக்குமா?

எம்பிலிப்பிட்டியவில் பாடசாலை மாணவர்கள் காணாமற் போனமை தொடர்பான வழக்கின் தீர்ப்பு குறித்து 'ராவய' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் முதலாவது பகுதி 14-02-99 உதயனில் வெளிவந்தது. இரண்டாவது பகுதி கீழே பிரசுரமாகிறது.

எம்பிலிபிட்டிய வழக்கில் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னராக எதிரி தரப்பு சட்டத்தரணிகளுக்கு விளக்கமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அப்போது எதிர் தரப்புச் சட்டத்தரணி ஒருவர் ''உங்களது நீதிமன்றையும், குடியரசையும், ஜனநாயகத்தையும் அன்று இராணுவத்தினர் தங்கள் கடமையை மேற்கொண்டதாலேயே காப்பாற்றினர். அவர்கள் தங்கள் கடமைகளை அன்று நிறைவேற்றியதாலேயே இந்தக் குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்' எனத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக இறுதி நேரம்வரையிலும் தாங்கள் குற்றவாளிகள் என எதிரிகள் தெரிவித்த போதிலும் எதிரி தரப்பு வழக்கறிஞரின் மேற்படி கூற்றானது இச்சம்பவத்தை குறிப்பிடத்தக்களவு ஏற்றுக்கொண்டுள்ளதாக அமைகிறது.

முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே நீதிமன்றம் செயலாற்றுகிறது எனத் தெரிவித்த நீதிபதி அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் விதத்தில் செயற்பட்டிருப்பின் எதிரிகளின் நடவடிக்கைகளை அவர்கள் ஆற்றிய கடமை என எடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு ஆள்கள் கடத்தப்பட்டு கொல்லப்படவில்லை எனில் கலவரத்தை அடக்க முடியாதிருக்கும் என சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் இருந்து நீதிபதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஏதோ விதத்தில் அக்கறையிருந்த காரணத்தாலோ என்னவோ வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்தன்று நீதிபதியின் மனைவியும் பிள்ளையும் இரத்தினபுரி நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர். வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் விசேட பொலீஸ் பாதுகாப்புடன் கொழும்பு சென்றனர். நீதி

### தமிழில்: கஜனி

பதி வாதி மற்றும் பிரதிவாதி தரப்புச் சாட்சியங்களைக் கவனத்தில் எடுத்து நீதிமன்றத்தில் தான் கண்டன, கேட்டனவற்றைத் தவிர வேறெதையும் கருத்தில்கொள்ளாது மிகவும் நீதியான தீர்ப்பை வழங்கியுள்ளார் என்பதை அனைவரும் ஏற்பர். பிரிகேடியர் லியனகேயையும் மற்றுமொரு எதிரியையும் முற்றிலுமாக விடுவித்த நீதிபதி ''இவர்கள் இருவருக்கும் எதிராக சாட்சியங்கள் இல்லாததால் நான் இவர்களை விடுதலை செய்யவில்லை. முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் இவர்கள் இருவரையும் குற்றவாளிகளாகக் காணப்படுவதற்கு போதுமானவையாக அமையவில்லை'' எனத் தெரிவித்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பு பல முக்கியத்துவங்களைக் கொண்டது. பாதிக்கப்பட்ட பிள்ளைகள் சார்பில் வழக்கின் தீர்ப்பை வழங்கிய வேளையில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி எம். ஏ. ஜஸ்டினின் கருத்துப்படி இந்த வழக்கின் தீர்ப்பும் அதன்படி வழங்கப்பட்ட தண்டனையும் காரணமாக பாதுகாவலர்களின் மனித உரிமையும் ஜனநாயகமும் காப்பாற்றப்பட்டுள்ளன. எந்தவொரு சூழ்நிலையின் போதும், யார் கட்டளையிட்ட போதும் யாருடைய விடயத்திலாவது நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்திற்குப் புறம்பாக கடமையை நிறைவேற்ற முற்படும் அதிகாரிகள் பின்னர் சட்டத்தின்படி நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிற்க நேரிடும் எனவும் இதற்கு இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் விதிவிலக்கு அல்ல என அனைவருக்கும் தெரிவிக்கும் தகவலாகவும் இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது, எந்தவோர் அரசின் அமைச்சர் ஒருவரால் வழங்கப்படும் அனுமதியின் பேரில் அல்லது தனது உயரதிகாரியால் வழங்கப்படும் கட்டளையின் பேரில் சட்டவிரோத— குற்றவியல்— கடமைகளை நிறைவேற்ற முயலும் அனைவரும் பின்னர் நீதிமன்றில் குற்றவாளியாக நிற்க நேரிடும் என்பதை இந்தத் தீர்ப்பு எடுத்துரைக்கிறது.

### ஜேர்மனியின் அனுபவங்கள்

இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னர் போர்க் குற்றவாளிகள் நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து விசாரிக்கப்பட்ட பிரசித்திபெற்ற நியுரம் பேர்க் வழக்கின் விசாரணையில் ஜேர்மன் பாசிச இராணுவத்தின் தளபதிகள் தமது விடுதலைக்காக, பின்வருமாறு தெரிவித்தனர். ''தாங்கள் செய்த குற்றத்தை தாங்கள் செய்ய நேரிட்டதற்கு தங்களால் நிராகரிக்க முடியாத உயர் கட்டளை அதிகாரியாக விளங்கிய ஹிட்லரின் கட்டளையே காரணம்'' எனத் தெரிவித்தனர். மேலும் அந்தச் சம்பவங்கள் போர் சூழ்நிலையின் போது நிகழ்ந்தன எனவும் அது தாய் நாட்டைக் காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட யுத்தம்எனவும்தெரிவித்தனர்.

இருப்பினும் நியுரம்பேர்க் சர்வதேச நீதிமன்றம் எதிரிகள் தெரிவித்த விடயங்கள் எவையும் அவர்கள் விடுதலை பெறுவதற்கோ அல்லது தண்டனை பெறுவதில் இருந்து தப்புவதற்கோ போதுமானவை அல்ல எனத் தீர்ப்பளித்தது.

1988-89இல் இடம் பெற்ற அரச பயங்கரவாதத்தின் போதும் அதன் பின்னர் இடம்பெற்ற அவ்வாறான நூற்றுக்கணக்கான சம்பவங்கள் தொடர்பாக வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகி தற்போது ஏதாவது முன்னேற்றங்கள் காணப்பட்டிருப்பின் அது ஜனநாயகம் மற்றும் மனித உரிமை ஆகியனவற்றிற்கு பெரிய பாதுகாப்பாக அமைந்திருக்கும். தற்போது இராணுவம் மற்றும் பொலீஸாருக்கு அரசாங்கத்தைச் சேர்ந்த பெரியவர்களால் விடுக்கப்படும் அழுத்தங்கள் எவ்வாறானது என்பதை வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் சம்பவங்கள் தெளிவாக்குகின்றன.

(முற்றும்)

# பட்டதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடத்த இதுவரைநடவடிக்கை இல்லை

வலி. தென்மேற்கு, பெப். 16

நாலாயிரம் பட்டதாரிகளுக்கு திணைக்களங்களில் வேலை வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் ஆரம்பப் பணிகள் எதுவும் இதுவரை மேற் கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கில் இத் திட்டத்தின் கீழ் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க எதிர்வரும் 21 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் யாழ். மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சையை நடத்த ஏற்பாடுகள் எதுவும் மேற் கொள்ளப்படாததையடுத்து வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டனர்.

இதையடுத்து அரச அதிபர் திறைசேரி அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

இந்த நேர்முகப் பரீட்சையை யாழ். செயலகமா திறைசேரியா நடத்துவது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று அரச அதிபர் இங்கு பதில் அனுப்பியுள்ளார்.

(இ-3-185)

# பாடசாலை உடைமைகள் விஷமிகளால் நாசம்

நெல்லியடி, பெப். 16

இரவு வேளை பாடசாலை ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி அங்கு நின்ற வாழைகள், உட்பட பல மரங்களை வெட்டி நாசமாக்கிவிட்டு, சிற்றுண்டிச்சாலை உடைமைகளையும் அடித்து நொருக்கினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மகா சிவராத்திரி தினத்தன்று தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இப்பாடசாலைக்கு அருகில் உள்ள புற்றளை பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி விழா நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், பாடசாலையில் புகுந்த இந்தக் கோஷ்டியினர் இவ்வித நாசவேலைகளைச் செய்துள்ளதுடன், அங்குள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையக் கூரையிலிருந்து சுமார் 20 ஓடுகளையும் கழற்றி எடுத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டனராம்.

இது குறித்துப் பாடசாலை அதிபர் திருமதி ச. இந்திரராசா, வடமராட்சிக் கல்விப் பணிப்பாளருக்கும், பருத்தித்துறைப் பொலீஸாருக்கும் முறையிட்டுள்ளார்.

(இ-109)

### நாளை

மாசி 05

புதன்கிழமை

திதி: பிரதமை

முற்பகல் 1.59 வரை

நட்சத்திரம்: சதயம்

மாலை 6.26 வரை.

சுபநேரம்: 5.03- 6.33

ராகுகாலம்: 12.03- 2.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தற்பெருமை எங்கு முடிகிறதோ, அங்கு கண்ணியம் தொடர்கிறது.

- யங்

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

இடம் பெயர்ந்து உரும்பிராயில் இயங்கி வரும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஆ,சி. நடராசா தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் வை. இராசையா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. கமலநாதன், வலி வடக்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வ. சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-ரீ)

# கற்கை நெறிக்கான பதிவுகளை 21 வரை மேற்கொள்ள முடியும்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 'தொழிலுரிமையும் சிறு வணிக முகாமைத்துவமும்' என்னும்கற்கை நெறிக்கான பதிவுகளை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மேற் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்குப் பணம் செலுத்தும் வங்கிப் படிவத்தைக் கொழும்பில் இருந்து பெறாதவர்களைப் பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அதே வேளை — பட்ட மேற்கல்வி டிப்ளோமாகற்கை நெறியைப் பின்பற்ற விரும்பும் மாணவர்கள் தமது விவரங்களைப் பிராந்திய நிலையத்தில் சமர்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ்
# பயிற்சி பெற்ற ஆசிரியர் மட்டுமே ஆரம்ப வகுப்பில் கற்பிக்க முடியும்
### கல்வி அமைச்சு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 16

தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் எவரும் ஆரம்ப வகுப்புக்களில் கல்வி கற்பிக்கக்கூடாது என கல்வி அமைச்சு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு இந்த ஆண்டு முதல் தரம் ஒன்று, தரம் ஆறு, தரம் ஒன்பது ஆகிய வகுப்புக்களுக்கு புதிய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்திருப்பது தெரிந்ததே.

இதன் அடிப்படையில் தரம் ஒன்றுக்கு செயல்முறையினூடாக கல்விமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது எனவும் —

இத்தகைய கல்வியை தரம் ஒன்று மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியில் போதியளவு பயிற்சி அனுபவம் மிக்கவர்களே போதிக்க வேண்டும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள தரம் ஒன்றுக்கான கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் யாழ். குடாநாட்டில் உள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர் பிரிவுகளிலும் குறுகிய கால மற்றும் நீண்டகாலப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

## வாசகர் திருமுகம்

### 2 ஆயிரமாம் ஆண்டு வழமையான நெட்டாண்டே!

'2000 பெப். 30 இல் பிறப்போருக்குப் பிறந்த நாள் கொண்டாட வாய்ப்பில்லை' என்ற தலைப் பில் 13—01—1999 உதயன் நாளேட்டில் 8ஆம் பக்கத் தில் வெளிவந்த செய்தி குழப்பத்தை ஏற்படுத்தி உள் ளது. யதார்த்தத்தை — உண்மையை நடைமுறையை வாசகர்கள் குறிப்பாகப் பள்ளிக்கூட மாணவர் அறிய வேண்டுமென விளக்கமான குறிப்பை இணைத்து ள்ளேன்.

எனது கருத்துக்கு ஆதாரமாக ஐக்கிய அமெரிக்க பெரிய பிரித்தானிய விண்ணியல் பஞ்சாங்கம், ஜேர் மனியக் கிரகநிலை நாள்காட்டி, (DIE DEUTSCHE EPHEMERIDE 1981 — 2000) கிருஷ்ணமூர்த்தி இந்தி யப் பஞ்சாங்கம் 1991 - 2000 போன்ற நூல்கள் கைவசமுள்ளன.

பெப்ரவரியில் 30 நாள்கள் எந்த ஒரு சந்தர்ப்பத் திலும் வரவே முடியாது. நெட்டாண்டெனில் அதா வது லீப் வருடமாயின் பெப்ரவரியில் 29 நாள்கள். அல்லாதுவிடில் 28 நாள்களே. ஏனைய மாதங்களின் நாள்கள் மாறாமல் வழமைப்படியே கொள்ளப்படும். 400 ஆல் வகுக்க முடியாத நூற்றாண்டுகள் மட்டும் நெட்டாண்டுகள் அல்ல; 1900 – 2100 லீப் வருடம் அல்ல; ஆனால் 2000 ஆம் ஆண்டு லீப் வருடமே. 1896 பெப்ரவரியில் 29 நாள்கள், அதன் பின் 1904 இல் பெப்ரவரியில் 29 நாள்கள், 2096 பெப்ரவரியில் 29 நாள்கள் அதன் பின் 2104 பெப்ரவரியில் 29 நாள்கள்.

பெப்ரவரியில் 30 நாள்கள் வருமாயின் வருடத் தில் 367 நாள்கள் வந்துவிடும் 2000 ஆம் வருட நாள் காட்டிகளும் பெப்ரவரியில் 29 நாள்கள் என்பதையே வலியுறுத்துகின்றன.

பூமியானது தன்னைத்தான் சுற்றுவதற்கு மட்டும் 24 மணிநேரம் எடுக்குமென்பதும் தன்னைத்தான் சுற்றும் அதேவேளை சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம் $365\frac{1}{4}$ நாள்கள் என்பதும் பருமட்டான கணிப் பேயன்றி துல்லியமானதல்ல

பூமி தன்னைத்தான் மட்டும் சுற்ற எடுக்கும் நேரம் 23 மணி 56 நிமிடம் 3.4 செக்கன் ஆகும். அத்தவேளை சூரியனையும் சுற்றிவர (Tropical Revolution of The Earth Round The Sun) எடுக்கும் காலம் 365 நாள்கள் 5 மணித்தியாலங்கள் 48 நிமிடங்கள் 48 செக்கன்களாகும்.

365 நாள்கள் 6 மணித்தியாலங்கள் எடுக்குமாயின் வருடமொன்று 365 நாள்களைக் கொண்டதாகவும் நான்காவது வருடம் 366 நாள்களைக் கொண்ட நெட்டாண்டாகவும் அமைவது ஏற்புடையது. இதன் அடிப்படையில் தான் கி.மு 46 வரை நடைமுறை யிலிருந்த ரோமன் கலண்டர் (Roman Calender) முறையை மாற்றி ஜூலியஸ் சீஸர் (Julius Caesar) வருட மொன்று 365 நாள்களைக் கொண்டதாகவும் ஒவ் வொரு நான்காவது வருடம் 366 நாள்களைக் கொண்ட நெட்டாண்டாக அமையும்படியும் ஜூலியன் கலண்டரை அறிமுகம் செய்து வைத்தார். ரோமன் கலண்டர் முறையை விட திருத்தமானதெனினும் இது வும் துல்லியமானதாக அமையவில்லை.

365 நாள்கள் 5 மணித்தியாலங்கள் 48 நிமி டங்கள் 48 செக்கன்கள் என்பதைக் கருத்தில் கொண்டு ஜூலியன் கலண்டர் முறையை கி. பி. 1582 இல் (POPE GREGORY XIII) பாப்பரசர் 13 ஆம் கிறகரி மாற்றி யமைத்தார். இது துல்லியமானது. இதே இன்று நடை முறையில் உள்ளது. கிறகரியன் கலண்டர் (GREGORIAN CALENDAR) என வழங்கப்படுகின்றது இதன்படி நூற் றாண்டுகள் நீங்கலாக நான் கால் (மீதமின்றி) வகு படக்கூடிய எந்த ஒரு வருடமும் நெட்டாண்டே. நூற்றாண்டுகளும் நானூறால் (400) மீதமின்றி வகு படுமாயின் அவையும் நெட்டாண்டே. எனவே 1700, 1800, 1900, 2100 நூற்றாண்டுகளாக வருவதனாலும் 400 ஆல் பிரிக்க முடியாத படியினாலும் நெட்டாண்டு கள் அல்ல. ஆனால் 1600, 2000, 2400 நூற்றாண்டு களெனினும் 400 ஆல் வகுபடக்கூடியவை. ஆதலால் இவைகள் நெட்டாண்டுகளே. நெட்டாண்டையே ஆங் கிலத்தில் லீப் வருடம் (LEAP YEAR) என்பர்.

**சி. இரத்தினவடிவேல்**

யாழ்ப்பாணம்.

### விவரங்கள் வலயப் பணிமனையில்

யாழ்ப்பாணம், பெப். 16

தென்மராட்சி கல்வி வலயத்தில் ஆசிரியர் நியமனத்துக்கு தெரிவாகியுள்ள பட்டதாரிகள் தொடர்பான விவரங்கள் வலயப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பட்டியலில் உள்ளவர்கள் தங்கள் கல்விச் சான்றிதழ்கள், பட்டச்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நாளை காலை 10 மணிக்கு வலயப் பணிமனைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

### கொடுப்பனவு இன்னும் இல்லை

கோண்டாவில, பெப். 16

உரும்பிராய் வடக்கு ஜே / 264 பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மீளக்குடியமர்தல் ஊக்குவிப்புப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

### சிகிச்சைக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், பெப். 16

இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞன் அலெக்ஸ்சாண்டர் சாம்ராஜ‌வின் சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரி வீதி சென் ஜோன்ஸ் தேவாலய பங்கு இளைஞர்கள் 15 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

யாழ். றோட்டறிக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி இளைஞனின் சிகிச்சைக்கென நிதி சேகரிக்கும் திட்டத்திற்கே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது (இ-க)

### தபாலகத்தில் நாணயத் தொலை பேசி

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ் ஸ்ரான்லி வீதியில் இயங்கும் பிரதம தபாலகத்தில் நாணயக்குற்றி தொலைபேசி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொருத்தப்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபாலகம் பிரதான வீதியில் உள்ள மாக்பெட் கட்டடத்தில் இயங்கிய போது மேற்படி தொலைபேசி அங்கு பொருத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 16

ஏழாலை வசந்தபுரம் களபாவோடை வசந்த நாகபூஷணி அம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியும் அம்மன் அவதார தின விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன.

[illegible] தேவக் குருக்கள் தலைமையில் பூசைகள் இடம்பெறும். [இ-க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீராவியடியைச் சேர்ந்த சிறுமி பிரான்ஸில் கொலை
### பொருள்கள் திருட்டு

நெல்லியடி, பெப் 16

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருவர் பிரான்ஸில் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டார். அவரின் வீட்டில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

இந்தத் துணிகரச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இடம்பெற்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த இந்தச் சிறுமி கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டு குடியுரிமை பெற்று பெற்றோருடன் அங்கு வாழ்ந்து வந்தார்.

சம்பவதினம் பெற்றோர் வேலைக்குச் சென்றிருந்தனர். பிரஸ்தாப சிறுமி அங்குள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கச் சென்று விட்டு மதிய போசனத்திற்காக தனது வீட்டுக்குத் தனியாக வந்திருந்தார். அப்பொழுதே அவர் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்து அறிந்த பெற்றோர் உடனடியாக தமது வேலைத்தளத்திலிருந்து வீட்டுக்கு வந்த சமயம் இச் சிறுமி கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கட்டிலின் கீழ் சடலமாகக் கிடந்தார்.

கொலையாளிகள் எனக் கருதப்படும் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் மறுநாள் சனிக்கிழமை தாம் திருடிய நகைகளை அங்குள்ள நகைக் கடைக்கு விற்கக் கொண்டு சென்ற சமயம் பிரான்ஸ் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பிரான்ஸில் வீடுகளுக்கு தீந்தை வேலை செய்பவர்களென்றும் கொலையுண்ட சிறுமியின் வீட்டுக்கும் இவர்களே தீந்தை பூசியுள்ளனர் என்பதும் விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த ஸ்ரீதரன் நிதர்சினி (வயது 13) என்னும் சிறுமியே இவ்விதம் கழுத்து நெரித்துக்கொலை செய்யப்பட்டவராவார். (இ-109)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சின்னத்துரை
(இளைப்பாறிய தலைமையாசிரியர்)

வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சின்னத்துரை 12 - 02 - 99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி கனகரத்தினம், சாரதா தேவி, திருமதி பத்மநாதன் இந்திராணி, சிவலோகசுந்தரம், சாம்பசிவம் (கட் /நெல் ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்), இராசரத்தினம் (இளைப்பாறிய எழுதுவினைஞர்), அருளானந்தம் (இளைப்பாறிய எழுதுவினைஞர்), திருமதி சோமசுந்தரம் இரத்தினம், காலஞ்சென்ற பண்டிதர் பொன்னம்பலம், திருமதி கணபதிப்பிள்ளை கதிராசிப்பிள்ளை, திருமதி ஆறுமுகம் அன்னம்மா, திருமதி ஆறுமுகம்செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**சா. ராணி,**
**சி. பரமேஸ்வரி.**
(மருமக்கள்)

வதிரி, சரவெட்டி. (63154)

### கணபதிப்பிள்ளை பாலசிங்கம் பரமநாதன்
(அரசன்)

(உரிமையாளர் அரஸ் புடைவையகம், யாழ்ப்பாணம் மண்டேலா ரேடஸ், யாழ்ப்பாணம்),
(அரஸ் டிரேடிங் பிரைவேட் லிமிட்டெட், சிங்கப்பூர்)

வேலணை கிழக்கு, இராசையா வீதியைப் பிறப்பிடமாகவும், தட்டாதெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து, தற்போது சிங்கப்பூரில் வசித்து வந்த K B பரமநாதன் (அரசன்) சிங்கப்பூரில் 14. 02. 98 அன்று அகாலமரணமானார்.

அன்னார் வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற க பாலசிங்கம், தற்போது கனடாவில் வசிக்கும் இராசம்மா ஆகியோரின் இரண்டாவது புத்திரனும், புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ் சென்ற இராசையா அன்னபூரணம் தம்பதிகளின் மருமகனும், விஜயகுமாரியின், (கனடா) அன்புக் கணவரும், சரண்யா (கனடா), கிஷோ (கனடா), யோக்சனா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், யோகநாதன் (கனடா), செல்வநிதிநாதன் (கனடா) கமாட்சிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலோகநாதன் (கனடா), சித்திரா (கனடா), ரேணுகா (கனடா), விஜகாந்தன் (கொழும்பு), திருமதிS விஜயலக்ஷ்மி (கனடா), விஜயேந்திரன் [ஜேர்மனி], திருமதி விஜயசாந்தி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்சீவ் [கனடா] வின் மாமனாரும், மதீசன் [கனடா], லாவண்யா [கனடா], ஆகியோரின் சிறிய தகப்பனாரும், குணா [கனடா], ராஜாஜி [கனடா], அயுன்ஜி [கனடா] ஆகியோரின் பெரிய தகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [18-02-99] வியாழக்கிழமை கனடா ரொறொன்ரோவில் நடைபெறும்.

தகவல்:
**மு நந்தகோபாலன்**

மண்டேலா றேடர்,
2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (63153)

ஸ்ரீ ராம ஜெயம்

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

சிரஞ்சீவி

**பார்த்திப சர்மா (தீபன்)**

இடம்:- நல்லூர் சிவன் கோயில் மண்டபம்
காலம்:- மாசிமாதம் 5ஆந் திகதி (17-02-99) புதன்கிழமை
நேரம்:- மு. ப. 11-35 மணிமுதல் 12-20 மணி வரை

மேற்படி வைபவத்தில் அனைவரையும் பங்கு பற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மார்க்கண்டேய சர்மா
பிரேமா தம்பதிகள்
மாதகல்.

தற்போதைய முகவரி
C. M. S. லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குறிப்பு: அன்று மாலை 4-00 மணியளவில் எமது இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

சுபமஸ்து (63158)

## 52 தபால் பொதிகள் இன்று வரும்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்தபால்கள் அடங்கிய 52 தபாற்பொதிகள் இன்று காலை காங்கேசன்துறை வந்துசேரவுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ். எடுத்து வரப்படுவதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி கப்பலில் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய ஒரு தொகுதி தபாற் பொதிகள் திருமலைக்கு இன்று எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## கண்ணீர் அஞ்சலி

**இரத்தினம் தனபாலசிங்கம்**

(உரிமையாளர் N. R. ரான்ஸ்போட்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது சங்க உறுப்பினர் இரத்தினம் தனபாலசிங்கம் அவர்கள் 11-02-99 இல் காலமானதையிட்டு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினர் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
உறுப்பினர்கள்.

213, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (63157)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை
திருமதி
**பு. பஞ்சாட்சரம்** (B.Sc)

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி.

(63160)

## ஈ. பி. டி. பி உறுப்பினரின் இறுதி சடங்கு

வடமராட்சி, பெப். 16

நேற்று முன்தினம் அச்செழுப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்ட வலி. கிழக்கு பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் பண்டாரி சுந்தரமியின் இறுதிக் கிரியைகள் நேற்று பிற்பகல் ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இதற்கு முன்னதாக அவரது சடலம் வலி. கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலியில் உள்ள தலைமையகத்திலும் அதனைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி அலுவலகத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. [ஐ-173-15-139]

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
சங்கானை.

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய இயக்குநர் சபை உறுப்பினருமாகிய

**கனகசபை திரவியம்**

மலர்வு 07-08-48 உதிர்வு 15-02-99

அவர்கள் 15-2-99 இல் மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். இவ்வேளை துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் எமது சங்கத்தின் சார்பில் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி, அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபையினரும்,
பணியாளரும்.

சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை. (சி/6511)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கக் கணக்காளர்
திரு. அ. அற்புதம் அவர்களின்
அன்புத் தாயார்

**அந்தோனி அன்னம்மா**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (63156)

எமது நேற்றைய ஓடியோ CD வெளியீடுகள்!

- நீ எனக்கு உயிர்மா
- பொன்விழா
- காமா
- அன்புள்ள காதலுக்கு
- அன்புள்ள காதலனுக்கு
- சித்திரையில் திருமணம்

**மூர்த்தி வீடியோ சென்ரர்**
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்பாக)
(63162)

## நன்றி நவிலல்

டாக்டர்

**நாகலிங்கம் கனகரத்தினம்**

06-02-99 அன்று காலமான அமரர் டாக்டர் நாகலிங்கம் கனகரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், அஞ்சலிச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

க. சுரேந்திரன்,
20, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
[63169]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்**

தோற்றம்: 13-09-1932
மறைவு 17-01-1999

அன்புச் சுடரே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்புடன் வாழவைத்த அம்மாவே!
கலங்குது எம் நெஞ்சங்கள்
தாங்காத உள்ளமுடன் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

கோட்டைக்காடு,
சுன்னாகம். (63165)

குருதேவோ பவ

## உபநயன பிரம்மோபதேச சுப நன் முகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய ஸ்ரீ உத்தராயணம் மாசி மாதம் 5 ஆம் நாள் (17-02-1999) புதன்கிழமை சதய நட்சத்திரமும் துதியைத் திதியும் சித்தயோகமும் கூடிய சுபநன்னாளில் முற்பகல் 11 மணி 35 நிமிடம் முதல் 12 மணி 20 நிமிடம் வரையிலான குருஹோரையுடன் கூடிய இடபலக்கின சுப நன் முகூர்த்தத்தில்

சக்கலாவத்தை பிரம்ம ஸ்ரீ இரங்கசாமிக்குருக்கள் அவர்களின் பௌத்திரனும் கொடிகாமம் பிரம்ம ஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் தௌஹித்திரனும் எமது குமாரர்களுமாகிய

சிரஞ்சீவிகள்

**ஜனார்த்தனன்** (தீபன்) **அரவிந்** (அரவிந்தன்)

ஆகிய இருவருக்கும்
யக்ஞோப வீத்தாரண பிரம்மோபதேச உபநயன முகூர்த்தம்

மஞ்சவனப்பதி அருள்மிகு ஸ்ரீ முருகப்பெருமான், ஸ்ரீ பிடாரி அம்பாள் திருவருளை முன்னிட்டு நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் சுப முகூர்த்தம் நடைபெறவுள்ளதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து குமாரர்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
பிரம்மஸ்ரீ ஸ்ரீமதி இ வரதராஜக்குருக்கள் — கௌரி தம்பதிகள்
பிரதமகுரு பிடாரி அம்பாள்,
மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தானம்,
கொக்குவில்.

நாச்சிமார் கோயிலடி,
958, A/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

இ மாலை 4 மணியளவில் இன்னிசை அரங்கு
பாட்டு, திரு. ஏ. ... — செல்வன் ச. திபாகரன் — வயலின்
மிருதங்கம் செல்வன் வ. இரமணன் — முகர்சிங்
திரு. ஏ. செல்வரத்தினம் — கடம்

(63171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வந்த செத்தல் மிளகாய்
# மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 16
கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (ச.தொ.ச) கிளைகள் ஊடாக மிளகாய் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

தற்பொழுது காங்கேசன் துறையில் சப்பலில் இருந்து இறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மிளகாய், சீனி, அரிசி, சன்லைட் சோப் மற்றும் பால்மா வகைகள் அனைத்தும் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு யாழ். கண்டி வீதி, பருத்தித்துறை, ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலுள்ள கிளைகளூடாக விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ச.தொ.ச. அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் தரித்துள்ள 'குமண' கப்பலில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு 150 மூடை மிளகாய் எடுத்து வரப்பட்டுள்ளது இந்த மிளகாய் கிலோ 165 ரூபா வீதம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை—
கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (ச.தொ.ச) ஸ்ரான்லி வீதிக்கிளையில் நேற்றுக் கட்டுப்பாட்டு விலையில் பொதுமக்களுக்கு செத்தல் மிளகாய் விநியோகிக்கப்பட்டது.

ஒரு கிலோ 165 ரூபா வீதம் விநியோகிக்கப்பட்டது. காலையில் ஒருவருக்கு ஒரு கிலோ வீதம் விநியோகிக்கப்பட்டபோதும் மாலையில் அரைக்கிலோ வீதம் விநியோகிக்கப்பட்டது.

மிளகாயைப் பெறுவதற்கு மக்கள் ச.தொ.ச. கிளைக்கு முன்னால் நேற்று நீண்ட வரிசையில் காத்து நின்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. [ஐ-5]

# தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் கொழும்பில் மாநாடு

கொழும்பு, பெப். 16
கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பண்டிதர், புலவர், வித்துவான்கள் ஆகியோருக்கான இருநாள் மாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவிருக்கின்றது.

கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் கலாசூரி ஆர். சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் இராசையா வடிவேலு, வித்துவான் எம்.ஏ.இரகுமான் பண்டிதர் கனகசபை சிவகுருநாதன், பண்டிதர் சரவணமுத்து சுப்பிரமணியம் ஆகியோர் 'இயற்றமிழ் வித்தகர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

இந்த மாநாட்டில் முதல் நாள் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் எஸ். தில்லைநாதனும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் வி, என். மதியழகன், போக்குவரத்து அமைச்சு முன்னாள் செயலாளர் தேவநேசன் நேசையா ஆகியோரும் பங்குபற்றுவர்.

தேசிய கல்வி நிறுவன முன்னாள் பணிப்பாளர் குமாரசாமி சோமசுந்தரம் நாவலர் வளர்த்த மரபுத் தமிழ் கல்வி என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

விபுலானந்தர் அரங்கில் நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பல அறிஞர்கள் கருத்துரை வழங்குவர். (இ-3-6)


**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
**A/L 99**
அளவையியல்
Paper Class
ஆசிரியர்:
R. P. சர்மா
ஆரம்பம்: 17-02-99
புதன் 3-30 p m.
(63117)



**ஸ்ரீ விநாயகர்**
வீடியோ & ஓடியோ
வீடியோ வெளியீடு!
- Survivor
- First Strike
- Perfect Target
- Thick and Thin
- Universal Soldier
- Absolution
- The Base
- The Minion

ஓடியோ வெளியீடு!
FATHER போக்ஸ்மனின்
- ஜெபப் பாடல்கள்

1 தொடக்கம் 14 வரை
பலாலி வீதி,
திருநெல்வேலிச்சந்தி,
மேல் மாடி.
(63147)



**தேவை**
Platen
Machine Minder
தேவை
நேரில் வரவும்.
**பாரதி பதிப்பகம்**
இல. 430,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
சி/6504)



உள்ளம் உருகி வடிக்கும்
**கண்ணீர் அஞ்சலி**
**K. P. பரமநாதன் (அரஸ்)**
உரிமையாளர்
அரஸ் ரேடிங் பிறைவேட் லிமிட்டெட், சிங்கப்பூர்
அவர்கள் 14—02—99 அன்று அகாலமரணமானதையிட்டு அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
சத்தியா அன் கோ
சன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (63149)



**கண்ணீர் அஞ்சலி**
எமது கல்லூரி ஆசிரியை
செல்வி யோ. தமிழினி அவர்களின்
அன்புத் தந்தையார்
**கார்த்திகேசு யோகநாதன்**
அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.
(சி/6510)


### வவுனியாவில்...
(முதலாம் பக்கத் தொடர்)
யாவி சட்டவிரோதமான முறையில் மக்களிடம் வரி அறவிடுவது குறித்துக் கேட்டபோது —

தேர்தலை எதிர்பார்த்தோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ ஓர் இயக்கம் வரி அறவிடுவதைப் பெருமளவு குறைத்துக் கொண்டு விட்டது என்று அவர் தெரிவித்தார்.

ஏனைய இயக்கங்களும் வரி அறவிடும் சட்டவிரோத செயலை நிறுத்தச் செய்வதற்கு முன்நடவடிக்கை எடுத்துள்ளோம். தமது கட்சிக்கும் இயக்கத்துக்கும் தேவையான நிதியை சட்டரீதியான முறையில் சம்பாதித்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்குமாறு அந்த இயக்கங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை—
பிஸ்டலுடன் நடமாடிய தமிழ் இயக்க உறுப்பினர் ஒருவர் செட்டிகுளத்தில் கைது செய்யப்பட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இதேசமயம்—
நேற்றுக் காலை வவுனியாவில் கோவில்குளம், ஆசிக்குளம், மகாரம்பைக்குளம் ஆகிய இடங்களில் இயக்கங்களைச் சேர்ந்த நபர்கள் ஆயுதங்களுடன் நடமாடியதாக பி பி.ஸி.யின் சிங்களசேவை தெரிவித்தது. [ஐ-உ-6-10]

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

மோட்டார் சைக்கிளைத் திருத்துவதற்காக மின் ஒட்டு வேலையை மேற்கொண்ட ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நல்லூர் செட்டித்தெருப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை மனோகரன் [வயது 47] என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே மின் தாக்கி உயிரிழந்தவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு நேற்று மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மரண விசாரணையை யாழ். பதில் நீதிவான் கே. கேசவன் மேற்கொண்டார்.

விசாரணையின் பின் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. [ஐ-15]

# மோதல் சம்பவங்களில் எட்டுப் புலிகள் மரணம்

வவுனியா, பெப். 16
மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஐவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' அறிவித்தது.

★ அம்பிகன் அல்லது மங்களவாணன் (கந்தபூபதி யோகராஜா — மட்டக்களப்பு),
★ பூவழகன் அல்லது புண்ணியசீலன் (வல்லிபுரம் விக்னேஸ்வரன் —மட்டக்களப்பு)
★ குணராம் (மார்க்கண்டு குழந்தைவேல் — மட்டக்களப்பு),
★ பார்த்திபன் (பாலசிங்கம் பத்மநாதன் — மட்டக்களப்பு)
★ கோபிக்குமார் (ஆறுமுகநாதன் சில்வெஸ்டர் — மட்டக்களப்பு)

ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —
கடந்த 12ஆம் திகதி மூன்றுமுறிப்பு பகுதியில் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் முகிலகரன் (மாணிக்கராஜா தவராஜா— மட்டக்களப்பு) என்பவரும் —

கடந்த 13ஆம் திகதி மூன்றுமுறிப்பில் இடம்பெற்ற மோதலில் சுகந்தி (செல்லத்துரை நிஷாந்தி — கிளிநொச்சி) மற்றும் ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற மோதலில் அகவிழி (இராஜேந்திரம் புஸ்பராணி — வவுனியா) ஆகியோரும் உயிரிழந்துள்ளதாக 'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

## பதவி விலக்கலை எதிர்த்து
# ரவி கருணநாயக்கா நேற்று மனு தாக்கல்

கொழும்பு, பெப். 16
நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தான் நீக்கப்பட்டது செல்லுபடியற்றது எனத் தீர்மானிக்குமாறு கோரி லலித் முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் [நாளை] நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரவி கருணநாயக்காவை லலித் முன்னணி உறுப்பினர் பதவியிலிருந்தும் அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதாக அந்த முன்னணியின் தலைவி சிறிமனி அத்துலத்முதலி சில வாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இந்த மனுவில் சிறிமானி அத்துலத்முதலி; அமைச்சர் டி. எம். ஜயரத்ன, நாடாளுமன்றச் செயலாளர் மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். [ஐ-10]

### வாகனம்...
(முதலாம் பக்கத் தொடர்)
இருந்து வாகனம் ஒன்று அண்மையில் துணிகரமாகக் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே திணைக்களத் தலைவர்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

'ராஸிக்' குழுவினர் எனத் தங்களைக் கூறிக்கொண்ட சிலர் நில அளவைத் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனத்தைச் சாரதியுடன் கடத்திச் சென்றது தெரிந்ததே.

அந்த வாகனத்தை விடுதலைப் புலிகளே தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குக் கடத்திச் சென்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கைது செய்யப்பட்ட இந்த வாகனத்தின் சாரதி இரண்டொரு தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். (ஐ-6-21)

### குமணவில்...
(முதலாம் பக்கத் தொடர்)
நிக் தொன் அரிசி எடுத்து வரப்பட்டது. இவற்றில்அரைவாசிஅரிசி மனிதபாவனைக்கு உதவாத நிலையில் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த அரிசியின் மாதிரி நேற்று யாழ். செயலகத்துக்கு எடுத்துவரப்பட்டு அதிகாரிகள் அதனைப் பார்வையிட்டனர்.

குருநகரில் உள்ள செயலக களஞ்சியத்தில் இந்த அரிசி முழுவதையும் தனியான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —
இந்தக் கப்பலில் 19 கார்களும், 'ஹைஏஸ்' வான் ஒன்று, 13 உழவு இயந்திரங்கள், 4 ஓட்டோக்கள் என்பனவும் எடுத்து வரப்பட்டன. (ஐ-5-173)

### புலிகளின்...
(முதலாம் பக்கத் தொடர்)
குள் ஒட்டப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

நேற்றுப் பிற்பகல் இப் பிரசுரங்களைப் படையினர் அகற்றிய போதிலும் சில இடங்களில் அவை தொடர்ந்தும் காணப்பட்டன.

### ஜே. வி. பி...
(முதலாம் பக்கத் தொடர்)
மீண்டும் தேர்தலை நடத்துமாறும் அந்த மனுவில் கோரப்படவுள்ளதாகவும் இந்த மனுவைத் தாக்கல் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளன எனவும் விமல் வீரசிங்கா தெரிவித்தார். (ஐ-10)

### அகதிகளுக்கான...
(முதலாம் பக்கத் தொடர்)
பாயற்றிற்கான — சிறியளவிலான — தொழிற்திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்கவும்—
இந்நிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### பொலீஸ் மா...
(முதலாம் பக்கத் தொடர்)
கள், சட்ட மா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஐ-6-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 02 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org